©
GOVERNMENT OF TAMIL NADU
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs.1.60 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 255A] சென்னை, புதன்கிழமை, மே 4, 2022
சித்திரை 21, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு-2053

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

2022 ஆம் ஆண்டு மே திங்கள் 4ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 28/2022**

**2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2022–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (திருத்தச்) சட்டம் என அழைக்கப்பெறும்.

(2) இது 2007–ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 32/2006.

இரண்டாம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

2. 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் இரண்டாம் இணைப்புப்பட்டியலில், IA என்ற விளக்கத்திற்கு பின்பு, பின்வரும் விளக்கம் சேர்க்கப்படுதல் வேண்டும், அவையாவன:—

"**விளக்கம்** IB.— மாநில அரசிற்கு முழுவதும் சொந்தமான மற்றும் கட்டுப்பாட்டில் உள்ள கழகமான, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் விற்பனை அளவினை தீர்மானிக்கும் நோக்கத்திற்காக,—

(a) வரிசை எண்கள் 1 மற்றும் 3–இல் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பாக, மாநிலத்தில் முதலாம் முனை விற்பனையில் வரி விதிப்பிற்கு உள்ளாகும் போது, பின்வரும் முறை பின்பற்றப்படுதல் வேண்டும், அதாவது:—



DTP—Ex-IV-1 (255A)

$$\frac{\text{விற்கப்படும் விலை (அதிகபட்ச சில்லறை விற்பனை விலை)}}{\text{100+மாநிலத்தில் முதலாம் முனை விற்பனையில் விதிக்கப்படும் வரியின் வீதம்.}} \times 100$$

(b) வரிசை எண் 2–இல் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பாக, மாநிலத்தில் இரண்டாம் முனை விற்பனையில் வரி விதிப்பிற்கு உள்ளாகும் போது, பின்வரும் முறை பின்பற்றப்படுதல் வேண்டும், அதாவது:—

$$\frac{\text{விற்கப்படும் விலை (அதிகபட்ச சில்லறை விற்பனை விலை)} - \text{கொள்முதலின் போது செலுத்திய தொகை (இது கலால் வரியை உள்ளடக்கும் ஆனால் முதலாம் முனை விற்பனையில் செலுத்தப்பட்ட மதிப்புக்கூட்டு வரியை உள்ளடக்காது)}}{\text{100+மாநிலத்தில் இரண்டாம் முனை விற்பனையில் விதிக்கப்படும் வரியின் வீதம்.".}} \times 100$$

**நோக்கக் காரண விளக்கவுரை.**

2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) கீழ், மாநில அரசிற்கு முழுவதும் சொந்தமான மற்றும் கட்டுப்பாட்டில் உள்ள கழகமான, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் நிலுவையில் உள்ள வரி மதிப்பீடுகள் தொடர்பான பிரச்சனைகளை தீர்க்கும் பொருட்டு, அந்த கழகத்தின் வரி விதிக்கத்தக்க விற்பனை அளவினை தீர்மானிப்பதற்கு உரிய வகைமுறைகளை செய்திட, இந்தச் சட்டத்தின் இரண்டாம் இணைப்புப்பட்டியலை, 2007–ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1–ஆம் நாளிலிருந்து முன் தேதியிட்டு, திருத்தம் செய்வதென, அரசானது, முடிவு செய்துள்ளது.

2. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**பி. மூர்த்தி,**
*வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 மே 4.

கி. சீனிவாசன்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.